**கவனிக்க.-** *02.03.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) இன் சிங்கள மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகள் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1749 - 2012 මාර්තු මස 09 වැනි සිකුරාදා - 2012.03.09**

*1749 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 676 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 676 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**கவனிக்க.-** (i) *சந்திம வீரக்கொடி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, சனவரி 6 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *செய்யது சேஹு கோயா தங்கள் மௌலானா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, சனவரி 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *ஸ்ரீலங்கா கமநல நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2011, சனவரி 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2012, மாச்சு மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மாச்சு மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

**மட்டக்களப்பு மாவட்டம், மட்டக்களப்பு மாநகர சபை நிர்வாக எல்லைக்குள் பொது அறுவைச்சாலையொன்றை கசாப்புக் கடைகள் கட்டளைச் சட்டம் பிரிவு 26 இன் கீழ் (அத்தியாயம் 272) பறைசாற்றுதலும் பிரகடனப்படுத்துதலும்**

கிழக்கு மாகாண முதலமைச்சரும் உள்ளூராட்சி அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகிய நான், கசாப்பு கடைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272) பிரிவு 26 இன் ஏற்பாடுகளால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கும் மட்டக்களப்பு மாநகர சபையின் சிபாரிசுக்கும் மட்டக்களப்பு மாவட்டம், மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் வட்டார இலக்கம் 23, குளத்துக்குடா, சத்துருக்கொண்டான் என்ற முகவரியில் அமையப்பெற்றுள்ள கட்டடத்தை கசாப்புக் கடைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பொது அறுவைச்சாலையாக இத்தினத்திலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் இத்தால் பறைசாற்றிப் பிரகடனப்படுத்துகின்றேன்.

சிவநேசதுரை சந்திரகாந்தன்,
முதலமைச்சரும் மாகாண நிதி மற்றும் திட்டமிடல் உள்ளூராட்சி, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், கிராமிய அபிவிருத்தி, மனிதவலு, சட்டமும் ஒழுங்கும், பிராந்திய நிருவாகம், சுற்றுலாத்துறை மற்றும் சுற்றாடல் அமைச்சரும்.

முதலமைச்சர் செயலகம்,
கிழக்கு மாகாண சபை,
வரோதய நகர்,
திருகோணமலை.
2012, சனவரி 09.

3-315

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**சப்பிரகமுவ மாகாண அரச நூலகர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011(2012)**

1.0 2009, புரட்டாதி 02 ஆந் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் சப்பிரகமுவ மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் 2010.11.30 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட சப்பிரகமுவ மாகாண அரச நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகச் சப்பிரகமுவ மாகாண அரச நூலகர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை இரத்தினபுரி நகரத்தில் மட்டும் நடாத்தப்படும்.

2.0 இப்பரீட்சை நடாத்தப்படும் தினம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பின்னர் அறிவிக்கப்படும். இப்பரீட்சைப் பெறுபேறுகளின் படி திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள், அரச நிருவாகச் சுற்று நிரூப இலக்கம் 15/90 இன் சட்டதிட்டங்களுக்கு அமைவாகச் சப்பிரகமுவ மாகாண அரச நூலகர் சேவை வகுப்பு III இன் பதவிகளுக்கு நியமிப்பதற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

3.0 தற்போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 14 ஆவதோடு எதிர்காலத்தில் ஏற்படும் வெற்றிடங்களும் இப்பரீட்சையின் மூலம் நிரப்பப்படும். நியமனம் செய்யப்படுவர்களின் எண்ணிக்கையும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியும் நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது வெற்றிடங்கள் எல்லாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

4.0 **சம்பளம்**.- 2007.08.24 ஆந் திகதிய 06/2006 (IV) ஆம் இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாண அரச நூலகர் சேவையில் வகுப்பு III இற்கு ஏற்புடையதான சம்பளத் தொகுதி M. N. 3-2006-A ஆவதுடன் மாதச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 15,005 - 4 × 180 - 6 × 240 - 11 × 320 - 20 × 360 - ரூபா 27,885 ஆகும்.

5.0 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

6.0 **தகைமைகள்**.- சப்பிரகமுவ மாகாண அரச நூலகர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குக் கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகள் ஏற்புடையதாகும் :-

(அ) சப்பிரகமுவ மாகாண நிருவாக எல்லைப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு முன்பு அண்மித்த காலத்தில் தொடர்ந்து 03 மூன்று வருட கால நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(ஆ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(இ) (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(ii) க. பொ. த. (சா. த) பரீட்சையில் கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களிலும் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். (இவற்றுள் 5 பாடங்களை ஒரே அமர்வில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்)

அத்துடன்

க. பொ. த. (உ. த) பரீட்சையில் ஏதாவது 3 பிரதான பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(ஈ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நூலகவியல் பற்றிய மூன்று வருட கால டிப்ளோமா பாடநெறியில் சித்தி பெற்றிருத்தல் ;

அல்லது

(ii) இலங்கை நூலகவியல் சங்கத்தின் நூலகவியல் பற்றிய மூன்று வருட கால டிப்ளோமா பாடநெறியில் சித்தி பெற்றிருத்தல்.

**குறிப்பு** :- (i) சகல விண்ணப்பதாரிகளும் பதவிகளுக்கு ஏற்புடையதான சகல தகைமைகளையும் 2012 சித்திரை மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

(ii) சப்பிரகமுவ மாகாண அரச நூலகர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு மூன்று அமர்வுகளுக்கு மேல் தோற்றுவதற்கு எவருக்குமே அனுமதி கிடையாது.

7.0 **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் சுய விருப்பின் பேரில் ஒரு மொழியில் மட்டும் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதோடு விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சை மூன்று வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

| பாடம் | மணித்தியாலங்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| (i) நூலகவியல் | 3 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள் |
| (ii) நுண்ணறிவுப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| (iii) பொது அறிவு | 1 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |

மேற்படி பாடங்களுக்கு ஏற்புடையதான பாடவிதானம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

7.1 **நூலகவியல்**.-

(1) **நூலகங்களும் நூலகத்துவமும்** :

(அ) நூலகங்களும் நூலக வரலாறும், புராதன மற்றும் புராதன மற்றும் நவீன உலகத்தின் பிரதான நூலகங்கள் ;

(ஆ) எழுத்துக் கலை மற்றும் புத்தகங்கள் உள்ளடங்கலானதுமான எழுதப்பட்ட ஊடகங்களின் ஆரம்பமும் பரிமாண வளர்ச்சியும் ;

(இ) அச்சிடற்றொழில் நுட்பத்தின் ஆரம்பமும் விரிவாக்கமும், நூலக சமூக அபிவிருத்தி விடயங்கள் மீதான செயல் விளைவுகளும் ;

(ஈ) நூல் நிலைய வகைகள் :

(i) விசேட நூலகங்கள் :- அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் முதலான நிறுவனங்கள் சார்ந்த நூலகங்கள் ஆராய்ச்சி நூலகங்கள் ஆகியவற்றின் கட்டமைப்பு, தொழிற்பாடுகள், மற்றும் பணிகள் ;

(ii) கல்விசார் நூலகங்கள் :- பல்கலைக்கழகங்கள், ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள் சார்ந்த நூல் நிலையங்களின் கட்டமைப்பு, தொழிற்பாடுகள் மற்றும் பணிகள் ;

(iii) பாடசாலை நூல் நிலையங்கள்

(iv) பொது நூல் நிலையங்கள் :

(v) பிரிவேன நூல் நிலையங்கள் மற்றும் துறவிமட/சமய நிறுவனங்களின் நூல் நிலையங்கள்.

(உ) நூலகக் குழுக்களின் கட்டமைப்பு, தேவைப்பாடு முக்கியத்துவம் மற்றும் தொழிற்பாடுகள் ;

(ஊ) நூலகத் தொழிலுக்குரிய கற்றறிந்தோர் தொழில் அமைப்புக்கள் மற்றும் அவற்றின், தொழிற்பாடுகள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் (இலங்கை, இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா) ;

(எ) நூல் நிலையக் கட்டடங்கள் - திட்டமிடல், கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் ;

* தற்போது உள்ள கட்டடமொன்றில் நூலகம் ஒன்றைத் தாபித்தல், ஒழுங்கமைத்தல் அல்லது மேம்படுத்தல் ;

(ஏ) நூலகப் பொருட்களைப் பராமரித்தல், பேணிப்பாதுகாத்தல் (Conservation)மற்றும் காப்பீடு (Preservation)
(ஐ) இடர்களும் (Disaster) இடர் முகாமைத்துவமும் (Disaster Management)

(2) ***அறிவும் தகவல்களை ஒழுங்கமைத்தலும்*** :
(அ) நூல்களை வகைப்படுத்தலின் நோக்கங்களும் பயன்களும் ;
(ஆ) இலங்கை நூலகங்களில் கையாளப்படும் பிரதான பகுப்பாக்கத் திட்டங்கள், தி. வி. தசமதான பகுப்பாக்கத் திட்டங்கள், சர்வதேச தசமதான பகுப்பாக்கத் திட்டங்கள் ;
(இ) நூலகப் பட்டியலாக்கத்தின் குறிக்கோளும் ஆங்கிலோ அமெரிக்கப்பட்டியலாக்கல் சட்டக்கோவை (AACR) முறையும் ;
(ஈ) நூல்களைப் பற்றிய விபரங்கள் ;
(உ) (AACRS2) விதிமுறைகளைப் பயன்படுத்திப் பதிவுப்பட்டியல் தயாரித்தல்.

(3) ***நூல் நிலைய வளங்களும் தகவல் சேவையும்*** :
(அ) பல்வகையான நூலக வளங்கள் ;
(ஆ) சேர்ந்த அபிவிருத்தி, சேர்ந்த அபிவிருத்திக் கொள்கைகளும் மற்றும் அவற்றின் முக்கியத்துவங்களும் ;
(இ) நூலக வளங்களைத் தெரிவு செய்தல் அடங்களான ஏற்புச் செயற்பாடுகள் ;
(i) நூலக வளங்களைத் தெரிவு செய்தலின் அடிப்படைக் கோட்பாடுகளும், மூலதத்துவங்களும் ;
(ii) ஏற்புச் செயற்பாடுகள், தளக்கோளம் உட்பட்ட பல்வகையான தொழில்நுட்பச் சேவைகள் ;
(iii) இருப்புக்களை மீளாய்தலும் அகற்றும் செயற்பாடுகளும் ;
(ஈ) வெளியிடும் வெளியீட்டு உரிமையும், தடையும் ;
(உ) நடைமுறை விழிப்புணர்வுச் சேவைகள் (Current Awareness Services)
(ஊ) வாசகர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் ;
(எ) மக்கள் தொடர்பும் நூலகங்களுக்கான பிரசாரங்களும்.

(4) ***தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (Information Communication Technology)***:
(அ) நூலகங்களில் கணினிகளைப் பயன்படுத்தலும், நூலக சேவைகளும், நூலக நடவடிக்கைகளின்போது தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவமும் வினைதிறனும் மேற்படி 4 துறைகளும் உள்ளடங்கும் வண்ணம் தயாரிக்கப்படும் அமைவு முறையிலான கட்டுரை/கட்டுரை முறையிலான கட்டாய வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும்.

7. 2 **நுண்ணறிவுத்தேர்வு**.- சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும், பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றைக் கிரகிப்பதிலும் அளவிடுவதிலும், பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றைக் கிரகிப்பதிலும் அளவிடுவதிலும், காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்து கொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக்கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. பல்தேர்வு மற்றும் சுருக்கமான பதில் எழுத வேண்டிய 50 வினாக்கள் கொண்டமைந்த வினாத்தாளாகும்.

7.3 **பொது அறிவு**.- தேசிய பிராந்திய அத்துடன் அனைத்துலக ரீதியான பல வேறு அமைப்புக்களைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக, கலாசார, கல்வி, அரசியல், பொருளாதாரம் அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலகம், நூலகத்துறை சார்ந்த பரீட்சார்த்தியின் பொது அறிவு மற்றும் விழிப்புணர்வு ஆகியன பற்றியும் மதிப்பிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. பல்தேர்வு மற்றும் சுருக்கமான பதில் எழுதவேண்டிய 50 வினாக்கள் கொண்டமைந்த வினாத்தாளாகும்.

நியமனத்துக்கான தகைமைகளைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றிற்கு நாற்பதாவது (40%) பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் திறந்த போட்டிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்கின்றவாறு பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறையைக் கட்டாயமாகக் கடைப்பிடித்து நியமனங்கள் வழங்கப்படும்.

8.0 **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் சப்பிரகமுவ மாகாண சபையின் 2003-90-01 இலக்கம் கொண்ட வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கப்படும் விதத்தில் சப்பிரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சின் அலுவலகத்தில்/திணைக்களத்தில் (உள்ளூராட்சி நிறுவனங்கள் தவிர்ந்த) அல்லது சப்பிரகமுவ மாகாணத்தினுள் அமைந்துள்ள ஏதாவதொரு பிரதேசச் செயலாளர் அலுவலகத்தில் கட்டணத்தைச் செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீள அளிக்கப்படமாட்டாது என்பதோடு காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் நிழற் பிரதி ஒன்றைத் தம் வசம் வைத்திருத்தல் வேண்டும்.

9.0 **விண்ணப்பங்கள்** :

A 4 (21 × 29 செ. மீ. ) சாதாரண அளவிலான கடதாசியை உபயோகித்து,

(அ) இலக்கம் 1 முதல் 4 வரையான பந்தியை முதலாம் பக்கத்திலும்,

(ஆ) இலக்கம் 5 முதல் அதனடுத்துவரும் பந்திகள் மறுபக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் கடதாசியின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கருதும் மொழியிலேயே தமது கையெழுத்தில் தெளிவாக விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) விண்ணப்பப்படிவங்களைத் தயார் செய்யும் போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

உரிய மாதிரி விண்ணப்பப் படிவ உருவில் அமையாதவையும் உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும் சரியாகப் பூர்த்திசெய்யாது முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் இழப்பிற்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாவதோடு பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பு ஏற்றல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

9.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர் என்ற பூர்வாங்கத் தீர்மானத்தின்படி உரிய பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ செலுத்தி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் அனைவரும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குச் சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படுவர். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்திகள் இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளனர் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலின்படி தகைமைகள் பரிசீலனை செய்யும்போது தேவையான தகைமைகள் இல்லாமை தெரியவருமிடத்து அவர்களின் பரீட்சார்த்தித் தகைமைகள் இரத்துச் செய்யப்படும். பரீட்சை நடைபெறும்போது தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

9.2 விண்ணப்பப்படிவத்தை வைத்து அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சப்பிரகமுவ மாகாண அரச நூலகர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011 (2012)" என்றும், நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மாவட்டத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

9.3 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியினது கையொப்பம் அரச பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளில் அதிகாரம் பெற்றுள்ள அதிகாரிகள், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவிகளில் பதவி வகிக்கும் அதிகாரி, வருடாந்த சம்பளம் ரூபா 2,40,360 அல்லது அதற்குக் கூடிய சம்பளம் பெறும் அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் அதிகாரி ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

9.4 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2012.04.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாகக் கீழ்க் காணப்படும் முகவரியிற்குப் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும் :-

செயலாளர்,
மாகாண அரச சேவை ஆணைக்குழு,
சப்பிரகமுவ மாகாண சபை,
"சப்பிரகமுவ மாகாண சபைக் கட்டடத் தொகுதி",
புதிய நகரம்,
இரத்தினபுரி.

10. பரீட்சைக்குத் தோற்றுதல்.- விண்ணப்பதாரிகளுக்குப் பரீட்சை அனுமதி அட்டைகளை அனுப்பியவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டுப் பத்திரிகைச் செய்தி ஒன்றும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 (இரண்டு) 3 (மூன்று) தினங்களுக்குப் பின்பும் பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்காவிடின் அது பற்றி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடத்தில் உள்ள விண்ணப்பப் படிவம் மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற் படப் பிரதிகள், பதிவு செய்த பற்றுச்சீட்டு, அனுமதி அட்டை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கம் குறிப்பிட்ட உங்கள் கோரிக்கைக்கான கடிதம் போன்றவற்றை உங்கள் வசம் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் மிகப் பயனுடையதாக இருக்கும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளுக்குப் பரீட்சைப் பெறுபேறுகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

11. பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காகக் கீழ்க் காணப்படும் ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

12.0 பொய்யான தகவல்களுக்கான தண்டனைகள் : விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாகச் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு அமைய யாராவது விண்ணப்பதாரி ஒருவர் தகைமை அற்றவராகத் தெரியவருமிடத்துப் பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சையின் பின்போ அல்லது எச் சந்தரப்பத்திலாவது அவருடைய பரீட்சார்த்தித் தகைமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்ட தகவல்கள் எச்சந்தர்ப்பத்திலாவது பொய்யானது எனத் தெரியவருமிடத்து அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

13.0 பரீட்சை நடாத்துதல் தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்விதிகளை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக வேண்டும்.

14.0 இப்பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். மேலும் இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாகச் சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் முடிவு இறுதி முடிவாகும். பரீட்சார்த்திகள் யாவரும் இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள பொதுப் பரீட்சைச் சட்ட திட்டங்களின் படி நடந்து கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாட்டிற்கு உட்படுவர்.

சுனெத்திரா குணவர்த்தன,
செயலாளர்,
சப்பிரகமுவ மாகாண சபை,
மாகாண அரச சேவை ஆணைக்குழு.

சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு அலுவலகம்,
“சப்பிரகமுவ மாகாண சபைக் கட்டடத் தொகுதி”,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2012.02.16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சப்பிரகமுவ மாகாண அரச நூலகர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011(2012)**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2, தமிழ் - 3
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

1. 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) உ.ம் : PERERA, A.B.C.

1.2 முழுப்பெயர் :----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

1.3 முழுப்பெயர் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

2.0 2.1 நிரந்தர முகவரி :----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2 நிரந்தர முகவரி :----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.3 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3.0 3.1 விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டம் : இரத்தினபுரி 1

கேகாலை 2

(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

3.2 பிரதேசச் செயலாளர் பிரிவு :----.

3.3 வசித்த காலப்பகுதி :----.

3.4 கிராம அதிகாரியின் பிரிவு :----.

4.0 4.1 பால் : பெண் - 1

ஆண் - 2

(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

4.2 பிறந்த திகதி : ஆண்டு மாதம் திகதி

4.3 2012.04.20 அன்று வயது : வருடங்கள் மாதங்கள் நாட்கள்

5.0 கல்வித்தகைமை :

5.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரம் (முதலாவது தடவை) :-

(i) பரீட்சையின் ஆண்டும் மாதமும் :----.

(ii) பரீட்சையின் சுட்டிலக்கம் :----.

(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1 | | 6 | |
| 2 | | 7 | |
| 3 | | 8 | |
| 4 | | 9 | |
| 5 | | 10 | |

5.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரம் (இரண்டாவது தடவை) :-

(i) பரீட்சையின் ஆண்டும் மாதமும் :----.

(ii) பரீட்சையின் சுட்டிலக்கம் :----.

(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1 | | 6 | |
| 2 | | 7 | |
| 3 | | 8 | |
| 4 | | 9 | |
| 5 | | 10 | |

5.3 க. பொ. த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரம் :----.

(i) பரீட்சையின் ஆண்டும் மாதமும் :----.

(ii) பரீட்சையின் சுட்டிலக்கம் :----.

(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

5.4 பரீட்சை அறிவித்தலில் 6.0 பந்தி (ஈ) பிரகாரம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நீங்கள் நூலகவியல் தொடர்பாகப் பெற்றுள்ள மூன்று வருடகால டிப்புளோமா தொடர்பான விபரங்கள் :----.

(i) பல்கலைக்கழகம் :----.
நிறுவனம் :----.
(ii) டிப்புளோமா :----.
(iii) ஆண்டு :----.

6.0 வேறு தகைமைகள் :----.

7.0 நீங்கள் எப்போதாவது ஏதாவது குற்றச்சாட்டுக்காக நீதிமன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? (உரிய கூட்டினுள் ✓ குறிப்பிடவும்) ஆம் எனில் விபரத்தைக் குறிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| ஆம் | | இல்லை | |

8.0 பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் விபரம் :-----.
பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :-----.
செலுத்திய கட்டணம் :----.

பற்றுச்சீட்டினை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.
பற்றுச்சீட்டின் நிழற் படப் பிரதியைத் தம் வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.

9.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனும் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகப் பூர்த்தி செய்யப்பட்டதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கும் உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்துப் பகுதிகளும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இந்த உறுதியுரைகள் பொய்யானவை எனத் தெரியவரின் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும் நியமனத்திற்குப் பின்னர் தெரியவரின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

(ஈ) இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10.0 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................. என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ........................ ஆந் திகதியில் இட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

திகதி :----.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

*11.0* **அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையில் இருக்கும் ஒருவர் விண்ணப்பதாரியாயின் கீழ்க் குறிப்பிடப்படும் உறுதியுரை திணைக்களத் தலைவரினாலோ அல்லது அவரினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியினாலோ செய்யப்படல் வேண்டும்.**

(i) இத்திணைக்களத்தில் ...................... ஆந் திகதியிலிருந்து ................ பதவியில் சேவைபுரியும் திரு./ திருமதி/ செல்வி ...................................... விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி வரை பெறவேண்டிய சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்றும் எச்சரிக்கை தவிர்ந்த வேறு எவ்வித தண்டனைகளுக்கும் உட்படவில்லை என்றும், விண்ணப்பப்படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையும் உண்மையானவையும் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) மேற்குறிப்பிட்ட பதவிக்கு அவர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் விண்ணப்பதாரி தற்போது வகிக்கும் பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

-----,
திணைக்களத் /நிறுவனத் தலைவர்/
அங்கீகாரம் பெற்ற அலுவலர் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(தயவு செய்து திணைக்கள/நிறுவன இலச்சினையை இடவும்.)

*3-287*